RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI:10.34256/i rjt22467

# இமையத்தின் ஆறுமுகம் நாவலில் சமுதாய சித்தரிப்புகள்

மி. மாலினி [அ, *], பா. இங்கிறீட் போவிங் [அ]

[அ] தமிழாய்வு மையம், இலக்குமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்துடன் இணைவுப்பெற்றது), நெய்யூர், கன்னியாகுமரி-629802, தமிழ்நாடு, இந்தியா

# Depictions of Society in Arumugam Novel by Imaiyam

**M. Malini [a, *], P. Ingreed Boving [a]**

[a] Research Centre of Tamil, Lekshmipuram College of Arts and Science, (Affiliated to Manonmaniam Sundaranar University, Tirunelveli-627012), Neyyoor, Kanniyakumari-629802, Tamil Nadu, India.

* Corresponding Author: malinilcas@gmail.com

Received: 23-07-2022
Revised: 19-09-2022
Accepted: 27-09-2022
Published: 09-10-2022

Check for updates

## ABSTRACT

The reason Tamil literature is called folk literature is that it portrays the real life of the people living in the society. The novel is based on a broad base of Tamil literature. Tamil literature has been created by different authors in different eras and the reason why it is outstanding even today is because of writing the problems happening in the society in their language. Socially oriented novels are a huge hit with people. In the novels of the centre, he has expressed ideas such as social inequality, economic problems, oppressive methods and humanistic thoughts in the novels. Society has various norms, customs and traditions. Imaiyam has told in the novel Arumugam that every person in the society is facing problems every day. This article examines the problems faced by the family after the death of the father who has to take care of the family. The author has realistically created the present day social environment in the novel Arumugam with the depiction of the society.

**Keywords:** Folk literature, Imaiyam, Society, Inequality, Arumugam,

## முன்னுரை

தமிழ் இலக்கியங்கள் மக்கள் இலக்கியங்கள் என்று அழைப்பதன் காரணம் அவை சமூகத்தில் வாழும் மக்களின் எதார்த்த வாழ்வியலை எடுத்துரைப்பதே ஆகும். தமிழ் இலக்கியத்தில் பரந்துபட்ட தளத்தை அடிப்படையாக கொண்டது நாவலாகும். தமிழ் இலக்கியங்கள் பல்வேறு காலங்களில் பல்வேறு படைப்பாளர்களால் படைக்கப்பட்டு இன்றைக்கும் சிறந்து விளங்குவதற்கு காரணமாக இருப்பது சமூகத்தில் நடக்கும் பிரச்சனைகளை அவர்களுடைய மொழிநடையில் எழுதுவதே காரணமாகும். சமூகம் சார்ந்து வரக்கூடிய நாவல்கள் மக்களிடம் பெரும் வெற்றி அடைகின்றது. இமையத்தின் நாவல்களில் சமூகத்தில் நடக்கும் ஏற்றத்தாழ்வுகள், பொருளாதார சிக்கல்கள், ஒடுக்கு முறைகள், மனித நேய சிந்தனைகள் போன்ற கருத்துக்களை நாவல்களில் கூறியுள்ளார்.

## சமுதாயம்

தனிமனிதர்களையும், பல்வேறு அமைப்புகளையும், நிறுவனங்களையும், குழுக்களையும், துணைக்குழுக்களையும் தன்னகத்தே கொண்ட ஓர் அமைப்பாகச் சமுதாயம் விளங்குகிறது. சமுதாயத்தில் தனி மனிதர்களின் பங்கு மிக முக்கியமானது. தனிமனிதர்கள் அடங்கிய குழுவே சமுதாயம். மனிதன் செம்மையாக வாழ்வதற்கு தேவையான வழிமுறைகளை சமுதாயம் அவ்வப்போது

உருவாக்கித் தருகின்றது. “ஒரு சமுதாயமானது தனிப்பட்டவர்களின் கூட்டமைப்பு, உரிமை மற்றும் ஒற்றுமை உணர்வு, ஏகேதம், நிரந்தர இயல்பு முதலான சிறப்புத் தன்மைகளை கொண்டுள்ளதெனச் சமூகவியலாளர்கள் கருதுகின்றனர்.” (Eshwarapillai, 2000) சமுதாயம் என்பது திட்டவட்டமாக அமைக்கப்பெற்ற வாழ்க்கை முறையின் ஒரு சோதனை என்றே கூறலாம். “ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் நீண்ட காலமாக ஒன்று சேர்ந்து வாழ்வதற்காக மக்கள் கூட்டம் ஏற்படுத்திக் கொள்ளும் கூட்டமே சமுதாயம்” என மானிடவியலார் கூறுகின்றனர் (Kanaga Suntharam, 1985).

## தாய் மகன் உறவு

ஆறுமுகம் நாவலில் தாய்க்கும் மகனுக்குமான அன்பை இமையம் அழகாக கூறியள்ளார். ராமன் இறந்த பின் தனபாக்கியம் ஆறுமுகத்திற்காக கருணை அடிப்படையில் கிடைத்த தோட்ட வேலைக்கு தன் மகனின் நலனுக்காக சொந்த ஊரினை விட்டு செல்கிறாள். ஊரை விட்டு போகும்போது அவ்வூர் மக்களுக்கு ஒரே பதிலைத் தான் சொன்னாள். “என் மவன் படிக்கணம், அவன் அப்பனாட்டம் கையெழுத்துப் போடத் தெரியாதவனா, இன்னொருத்தனுக்கு முட்டியடிக்கவுட மாட்டான். அவன் கையில் மம்பட்டியக் கொடுக்க சொல்லுறீங்களா? அதுக்கா நான் புள்ளப் பெத்தன்? எனக்கிருக்கிறது ஒண்ணே ஒண்ணு அதுவும் நாயுடு வீட்டில் போயி ரெண்டு மாகாணி நெல்லுக்கு முட்டியடிக்கணுமா?” என்று கூறிவிட்டு யாருடைய பேச்சினை கேட்காமல் பாண்டிச்சேரிக்கு போகிறாள் (Imayam, 2007). இன்றைக்கும் தங்கள் பிள்ளையின் படிப்பிற்காகவோ அல்லது வேலையின் காரணமாகவோ தன் உயிரினை விட்டு போகின்ற தனபாக்கியத்தை போன்று இன்றைக்கும் நம் சமூகத்தில் இருக்கிறார்கள் என்பதை சமூக கண்ணோட்டத்துடன் கூறியுள்ளார்.

## ஆணாதிக்கம்

சமூகத்தில் முக்கிய பங்கு வகிப்பவர்கள் பெண்கள் தான். ஒவ்வொருவரின் வாழ்க்கையின் இன்பத்திலும், துன்பத்திலும் இருப்பவர்கள் பெண்கள் தான். பெண்களுக்கே உரியது கற்பு. ஆனால் அந்த கற்பைச் சூரையாடுவதில் சில ஆணாதிக்கவர்க்கம் உள்ளதை ஆசிரியர் தம் நூலில் கூறியுள்ளார். பாக்கியம் தன் மாமனார் மாமியாரிடம் சண்டை பிடித்து விட்டு வீட்டை விட்டு வெளியேறி பாண்டிச்சேரிக்கு வந்து விட்டாள். பாண்டிச்சேரி பஸ்ஸ்டாண்டிலேயே அன்று முழுவதும் இருந்தாள். எங்கே போவதென்று வழி தெரியவில்லை. பாக்கியம் தனியாக நிற்பதை பார்த்த காஜாபாய் அவளிடம் “வர்ரீயா எம்புட்டு ரேட்டு, ஒரு புல் நைட்டுக்கு எவ்வளவு கேக்குற? ஒரு ஆள் தான்” (இமையம் ப:64) என்று கேட்ட மறு நொடியே எட்டிச் சண்டைப் பிடித்து அடிக்கப் போனாள். தனியாக ஒரு பெண் நின்றால் உடனே இப்படித் தான் கேட்கிறார்கள் என்பதை ஆசிரியர் தம் நாவலில் கூறியுள்ளார். மேலும்,

வசந்தா என்பவள் அட்டை கம்பெனியில் வேலை செய்கிறாள். அட்டை கம்பெனியில் வேலைப்பார்க்கும் மேலதிகாரி இவளிடம் தப்பாக நடக்க முயற்சி செய்கிறான். வசந்தா வர தாமதமானதால் ஆறமுகம் அவளிடம் கேட்கிறான் என்ன நடந்தது என்று உடனே வசந்தா நாளையில் இருந்து இங்கு வேலைக்கு வரவேண்டாம்,

“அவன் என்னா கேட்டான்?”

“என்னமோ கேட்டான், நாயி”

“அவன அடிக்க வேண்டியது தான”

“பொம்பளென்ன எங்கேயும் இப்படித்தான்” (Imayam, 2007)

இன்றைய காலத்திலும் பாக்கியத்தை போன்றும், வசந்தாவை போன்றும் வக்கிர குணம் கொண்ட சில ஆண்களால் பெண்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை இனறைய சூழ்நிலையோடு ஆசிரியர் கூறியுள்ளார்.

## விலை மகளிர்

விபச்சாரம் செய்யம் பெண்களை சமூகம் மதிப்பதில்லை. அவர்களை வெறுக்கின்றனர். குடும்பச் சூழ்நிலை காரணமாகவும் வீட்டை விட்டு ஓடி வருகின்றவர்களையும், எந்த வருமானமும் இல்லை என்று இருப்பவர்களையும், மிரட்டியும், கடத்திக் கொண்டு வந்து இத்தொழிலை செய்ய வைக்கின்றனர். இத்தொழிலைச் செய்யும் பெண்ணை சமூகம் மதிப்பதில்லை. அவர்களை தப்பான கண்ணோட்டத்துடன் பார்க்கிறது. இவர்களுக்கு என்று எந்த அங்கீகாரம் இல்லை. இவர்கள் உடம்புச் சரியில்லை என்று மருத்துவமனைக்கு சென்றால் மருத்துவர்ககளும், நர்சுகளும் "இங்க எதுக்குடி வந்தீங்க, இங்க எந்த மாப்ளடி ஒங்களுக்காகக் காத்துக்கிட்டு இருக்கான்? நீங்க எல்லாம் செத்தா என்ன? நாட்டுல எவ்வளவு சனங்க செத்துப் போறாங்க. ஒங்களுக்கு மட்டும் என்ன அப்படியொரு இது" என விலைமகளிர் பெண்களை பற்றி ஆசிரியர் நாவலில் கூறியுள்ளார் (Imayam, 2007).

## குடும்ப சூழல்

ஆறுமுகம் தன் அம்மா மீது அதிக பாசம் வைத்துயுள்ளான். தனபாக்கியம் என்ன சொன்னாலும் கேட்பான். தனபாக்கியம் வேலைக்கு போன பிறகு தனபாக்கியத்திற்கும், ஆறுமுகத்திற்கும் பேசுவதற்கோ விளையாடுவதற்கோ நேரம் இருக்காது. ஒரு நாள் பள்ளி மதியமே முடிந்து விட்டது. அன்று ஆறுமுகம் மிகவுமு; மகிழ்ச்சியுடன் வீட்டிற்கு வருகிறான். வீட்டில் வந்து பார்த்தால் தன் அம்மா வேறு ஒருவருடன் படுத்திருப்பதை பார்த்து அந்த நொடியே வீட்டை விட்டு ஓடிப் போகிறான். திரும்பி பார்க்காமல் ஓடிக்கொண்டே இருக்கிறான். வீட்டை விட்டு ஓடி வந்த ஆறுமுகம் ரிக்ஷா ஓட்டுகிறான். அட்டைக் கம்பெனியில் வேலைக்கு போகின்றான். சமையல் வேலைக்கு செல்கின்றான். என ஆசிரியர் வீட்டை விட்டு ஓடி வந்த ஆறுமுகத்தின் வாழ்க்கை எப்படியெல்லாம் திசை மாறுகிறது என்பதையும் இன்றைய குடும்ப சூழ்நிலையில் பிள்ளைகள் ஏதோ ஒரு காரணத்துக்காக தற்கொலை செய்வதும் தவறான பாதைக்கு செல்கின்றனர் என்பதையும் சமூக கண்ணோட்டத்துடன் பதிவுச் செய்துள்ளார்.

## முடிவுரை

சமுதாயம் பல்வேறு நெறிகள், வழக்கங்கள், பண்பாடுகளைக் கொண்டது. சமூகத்தில் ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு நாளும் பிரச்சனைகளைச் சந்தித்து கொண்டுத்தான் இருக்கிறார்கள் என்பதை இமையம் ஆறுமுகம் நாவலில் சொல்லியிருக்கிறார். குடும்பத்தை பார்க்க வேண்டிய தகப்பன் இறந்தபின் அந்த குடும்பம் சந்திக்கும் பிரச்சனைகளை இன்றைய சமூக சூழலோடு நடப்பியலை எதாhர்த்தமாக ஆசிரியர் ஆறுமுகம் நாவலில் படைத்திருக்கிறார் என்பதை சமுதாய சித்தரிப்புடன் இக்கட்டுரை ஆராயப்பட்டுள்ளது.

## References

Eshwarapillai, T. (2000) Bakthi Ilakiyathil Samuthaya Paarvi, Tamil University Thanjavoor, India.

Imayam, (2007) Aarumugam, Kiriya Pathipagam, Thiruvanmiyur, Chennai, India

Kanaga Suntharam, V.J.K. (1985) Sirapiyalin Samuga Puthinagal, Vanathi Pathipagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Authors 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License